## பாடம் - 5
## மறுமை நாள்

## الدرس الخامس
## قيامة الساعة

**1.**இறுதி நாள் தீய மனிதர்கள் மீதே ஏற்படும். அதாவது இறுதி நாள் ஏற்படும் முன்(ஏகஇறைவனை) நம்பிக்கை கொண்டோரின் உயிர்களைக் கைப்பற்றக் கூடிய தூய்மையான காற்றை அல்லாஹ் அனுப்பி வைப்பான். அதன் பின்னர் அல்லாஹ் எல்லாப் படைப்பினங்களையும் மரணிக்கச் செய்து இவ்வுலகத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நாடினால் சூர் ஊதும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட வானவரிடம் அதில் ஊதும்படி ஏவுவான். (சூர் என்பது பெரிய தொரு எக்காளமாகும்.) மக்கள் அந்த சப்தத்தைக் கேட்டவுடன் மூர்ச்சையாகி விடுவார்கள்.

﴿وَنُفِخَ فِي الصُّورِ فَصَعِقَ مَنْ فِي السَّمَاوَاتِ وَمَنْ فِي الْأَرْضِ إِلَّا مَنْ شَاءَ اللهُ ثُمَّ نُفِخَ فِيهِ أُخْرَى فَإِذَا هُمْ قِيَامٌ يَنْظُرُونَ﴾ [الزُّمر:٦٨]

**அல்லாஹ் கூறுகிறான்:** சூர் ஊதப்படும். அப்போது அல்லாஹ் நாடியவர் களைத் தவிர வானம், பூமியிலுள்ள அனைவரும் மூர்ச்சையாவார்கள். (39:68)

இது வெள்ளிக்கிழமை ஏற்படும். அதன் பின்னர் வானவர்கள் அனைவரும் மரணித்து விடுவார்கள். அல்லாஹ்வைத் தவிர எவரும் இருக்க மாட்டார்கள்.

**2.**மனிதனின் உடலனைத்தும் அழிந்துவிடும். அவனது முதுகந்தண்டின் கடைசியிலுள்ள ஒரு சிறு எலும்பைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பூமி தின்று விடும். எனினும் நபிமார்களின் உடல்களைப் பூமி தின்னாது. அல்லாஹ் வானிலிருந்து ஒரு தண்ணீரை இறக்கி வைப்பான். (அழிக்கப்பட்ட) உடல்கள் வளர்ந்துவிடும். அல்லாஹ் மக்களை எழுப்ப நாடினால் சூர் ஊதும் பொறுப்பிற்குரிய வானவர் இஸ்ரா:ஃபீலை உயிர்ப்பிப்பான். அவர் இரண்டாம் முறை சூர் ஊதுவார். அல்லாஹ் எல்லாப் படைப்புகளையும் உயிர்ப்பிப்பான். மக்கள் தம் மண்ணறைகளிலிருந்து ஆரம்பமாக அல்லாஹ் அவர்களைப் படைத்தது போன்று செருப்பு அணியாதவர்களாக, நிர்வாணிகளாக, விருத்தசேதனம் செய்யப்படாதவர்களாக வெளிவருவார்கள்.

﴿وَنُفِخَ فِي الصُّورِ فَإِذَا هُمْ مِنَ الْأَجْدَاثِ إِلَى رَبِّهِمْ يَنْسِلُونَ﴾ [يس:٥١]

**அல்லாஹ் கூறுகிறான்:** 'சூர் ஊதப்படும். உடனே அவர்கள் மண்ணறை களிலிருந்து தமது இறைவனை நோக்கி விரைவார்கள்.' (36:51)

﴿يَوْمَ يَخْرُجُونَ مِنَ الْأَجْدَاثِ سِرَاعًا كَأَنَّهُمْ إِلَى نُصُبٍ يُوفِضُونَ ، خَاشِعَةً أَبْصَارُهُمْ تَرْهَقُهُمْ ذِلَّةٌ ذَلِكَ الْيَوْمُ الَّذِي كَانُوا يُوعَدُونَ﴾ [المعارج:٤٣،٤٤]

'பலி பீடங்களை நோக்கி விரைந்து செல்பவர்களைப்போல் அந்நாளில் மண்ணறைகளிலிருந்து வேகமாக வெளியேறுவார்கள். அவர்களின் பார்வை தாழ்ந் திருக்கும். இழிவு அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அந்நாள்தான் அவர்கள் எச்சரிக்கப்பட்ட நாள்.'(70:43,44)

முதலாவதாக பூமி பிளந்து வெளிப்படுபவர், நபி மொழியில் வந்துள்ளதுபோல் நம்முடைய நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் தாம். இதன் பின் மக்கள் ஒன்றுதிரட்டப்படும் மைதானத்திற்கு கொண்டு வரப்படு வார்கள். அது பரந்த விசாலமான பூமியாகும். (ஏக இறைவனை) நிராகரித்த வர்கள் முகம் குப்புற கொண்டு வரப்படுவார்கள். முகம் குப்புற எப்படி கொண்டு வரப்படுவர்கள்?0 என நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள்,

((أَلَيْسَ الَّذِي أَمْشَاهُ عَلَى الرِّجْلَيْنِ فِي الدُّنْيَا قَادِرًا عَلَى أَنْ يُمْشِيَهُ عَلَى وَجْهِهِ يَوْمَ الْقِيَامَةِ)) (خ/ ٤٧٦٠، م/ ٢٨٠٦)

'அவர்களைப் பாதங்களால் நடக்க வைத்தவன் அவர்களை முகம் குப்புற நடக்க வைக்கவும் சக்தி உள்ளவன்' என்று கூறினார்கள். (புகாரி-4760, முஸ்லிம்-2806)

அல்லாஹ்வின் நல்லுரையைப் புறக்கணித்தவன் மறுமையில் குருடனாக எழுப்பப்படுவான். சூரியன் மக்களை நெருங்கியிருக்கும் அந்நாளில் மனிதர்கள் அவரவர்களின் செயல்கள் அளவிற்கு வியர்வையில் இருப்பார்கள். சிலருக்கு கணுக்கால் வரை வியர்வை இருக்கும். சிலருக்கு இடுப்பளவு இருக்கும். இன்னும் சிலர் முழுவதும் வியர்வையில் மூழ்கிவிடுவார்கள்.

அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத அந்நாளில் அவனது நிழலின் கீழ் நிழல் கொடுக்கப்படுபவர்களும் அங்கு இருப்பார்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ: سَبْعَةٌ يُظِلُّهُمْ اللهُ فِي ظِلِّهِ يَوْمَ لَا ظِلَّ إِلَّا ظِلُّهُ الْإِمَامُ الْعَادِلُ وَشَابٌّ نَشَأَ فِي عِبَادَةِ رَبِّهِ وَرَجُلٌ قَلْبُهُ مُعَلَّقٌ فِي الْمَسَاجِدِ وَرَجُلَانِ تَحَابَّا فِي اللهِ اجْتَمَعَا عَلَيْهِ وَتَفَرَّقَا عَلَيْهِ وَرَجُلٌ طَلَبَتْهُ امْرَأَةٌ ذَاتُ مَنْصِبٍ وَجَمَالٍ فَقَالَ إِنِّي أَخَافُ اللهَ وَرَجُلٌ تَصَدَّقَ أَخْفَى حَتَّى لَا تَعْلَمَ شِمَالُهُ مَا تُنْفِقُ يَمِينُهُ وَرَجُلٌ ذَكَرَ اللهَ خَالِيًا فَفَاضَتْ عَيْنَاهُ (خ/ ٦٦٠، م/ ١٠٣١)

**நபி(ஸல்)கூறினார்கள்:** 'அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத நாளில் அல்லாஹ் ஏழு நபர்களுக்கு தனது நிழலின் கீழ் நிழல் கொடுப்பான். நீதி வழுவாத ஆட்சியாளன், இறைவழிபாட்டில் இளமையைக் கழித்த இளைஞன், தன் உள்ளத்தைப் பள்ளியுடன் தொடர்புபடுத்திக்கொண்ட மனிதன், அல்லாஹ் வுக்காக நேசம் கொண்ட இரு மனிதர்கள், அவர்கள் அல்லாஹ்வுக்காகவே ஒன்று கூடுவார்கள். அல்லாஹ்வுக்காகவே பிரிந்து செல்வார்கள். அழகும் செல்வாக்குமுள்ள ஒரு பெண் (தவறு செய்ய) அழைத்த போது அல்லாஹ்வை அஞ்சுகிறேன் எனக் கூறி(விலகி)ய மனிதன், வலது கை கொடுப்பதை இடது கை அறியாவண்ணம் தர்மம் செய்த மனிதன், தனிமையில் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து, கண்ணீர் சிந்திய மனிதன்.' (புகாரி-660, முஸ்லிம்-1031)

இது ஆண்களுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும் தான். அவர்களும் தம் செயல்கள் குறித்து விசாரிக்கப்படுவர். அவர்களின் செயல்கள் நல்லவையாக இருந்தால் நன்மையும் தீயவையாக இருந்தால் தீமையும் அவர்களுக்குக் கிடைக்கும் கேள்வி, கணக்கும் நற்கூலியும் தண்டனையும் ஆண்களுக்கு இருப்பது போலவே பெண்களுக்கும் உண்டு.